tutional provision. We cannot waive it. After the expiry of 14 days I will consult the Hon. Leader of the House and announce the date. Members will be intimated regarding the next session.

*(ஆ) அமைச்சரவை மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுப் பட்டியல் பேரவை முன் வைக்கப்படுவது குறித்தும், அதற்கான பதிலை இந்தியப் பிரதமருக்கு அனுப்பிவைப்பது குறித்தும்.*

DR. H. V. HANDE: The Hon. Chief Minister has told us previously that he would try to place a copy of the charges against the Government on the table of the House and that he was in touch with the Prime Minister to get her permission for the same. He also told us that the DMK party leader in Parliament was also in touch with the Prime Minister. This has become a most important matter and the fate of Tamil Nadu hinges on this pivotal issue of list of charges. May I know what prevents this Government from placing the list of charges on the table of the House and also the replies of Government so that we could discuss the whole thing and if necessary certain other charges also that may be levelled against the Government ?

Also another point, Sir. With regard to the list of charges, the reply of the Chief Minister in response to the request of the Prime Minister should have been normally sent very early. But it is now more than three weeks since the charges have been sent to the Chief Minister by the Prime Minister, for his comments. Still, we understand from reliable authority that the Chief Minister has not sent his reply to the Centre. What is the reason for this abnormal delay, we would like to know all the mysteries ?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவாவர்களே, இந்த அமைச்சரவை மீது திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், திரு. கலியாணசுந்தரம் அவர்களும், அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த சிலரும் கையெழுத்திட்டு ஜனாதிபதியிடம் கொடுத்த குற்றச்சாட்டுகளின் பட்டியலை இந்த மன்றத்தில் வைப்பதற்கு ஏன் தயங்குகிறீர்கள் என்ற கேள்வியைக் கடந்த சில நாட்களாக நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், மற்றும் எதிர்க்கட்சியில் உள்ளவர்களும் இந்த மன்றத்தில் கேட்டு வந்திருக்கிறார்கள். இன்றைக்கும் திரு. ஹாண்டே அவர்கள் அதே பிரச்னையை எழுப்பி அந்தப் பட்டியலை வைப்பதற்கு என்ன பயம், ஏன் தயக்கம் என்ற கேள்விக் கணைகளை விடுத்திருக்கிறார்கள். அதைப்போலவே, பிரதமருக்கு

அனுப்ப வேண்டிய விளக்கங்களை ஏன் இன்னும் அனுப்பவில்லை என்று கேட்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கும், இந்த மன்றத்தின் மூலமாக நாட்டு மக்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பிரதமருக்கு அனுப்பப்படுகிற விளக்கங்கள் இன்றையதினம் அனுப்பப்பட்டுவிட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே, ஏன் அந்தப் பட்டியல் இங்கே வைக்கப்படவில்லை என்பதற்கும் நான் என் விளக்கத்தை அளிக்க வேண்டியவனாக இருக்கிறேன். குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்ட அந்தப் பட்டியலை திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், திரு. கலியாணசுந்தரம் அவர்களும், அவர்களோடு சிலரும் சேர்ந்து ஜனாதிபதியிடத்தில் கொடுத்து இருக்கிறார்கள். அப்படிக் கொடுத்தபோது பிரதமர் நேரடியாக ஒரு விசாரணைக் குழுவை அமைக்க வேண்டும் என்பது அந்த பட்டியலைக் கொடுத்தவர்கள் விருப்பமாக இருந்தது. பிரதமர் அவர்கள் நம் கருத்தைக் கேட்க எனக்கு அதை அனுப்பி வைத்தார்கள். ரகசியமாகக் கொண்டுபோய் ஜனாதிபதியிடம் கொடுத்து, அது பிரதமரிடத்தில் வந்து, பிரதமர் என்னிடத்தில் அனுப்பி வைத்ததை வெளியிடலாமா என்று நான் பிரதமரிடத்தில் கேட்பதும், அதற்காக அனுமதி பெறுவதும் ஒரு மரபு, ஒரு நாகரீகம் என்று கருதினேன். அதற்காகத்தான் இத்தனை நாட்களாகத் தயக்கம் காட்டப்பட்டது. டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதைப் போல திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாடாளுமன்றத்தில் கட்சிக் குழுவின் தலைவராக இருக்கிற நண்பர் செழியன் அவர்களும் அதுபற்றி உடனடியாக அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இரண்டு நாளைக்கு முன்பு நானும் பிரதமருக்கு ஒரு 'டெலக்ஸ் மெசேஜ்' மூலமாக உடனடியாக நாங்கள் அதை வைக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். எதிர்த் தரப்பில் இருக்கிறவர்கள் அதை வலியுறுத்திக் கொண்டு இருக்கிறார்கள்; ஆகவே, மன்றத்தில் அந்தப் பட்டியலையும், பதிலையும் வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்ற விபரத்தையும் பிரதமருக்குத் தெரிவித்திருக்கிறேன். இதுவரையில் அதற்கான பதில் எதுவும் வரவில்லை.

குற்றச்சாட்டுப் பட்டியலை ஜனாதிபதியிடத்திலே கொடுத்து, அவர் அதைப் பிரதமருக்கு அனுப்பி வைத்திருக்கிறார். ஆனால் அந்தப் பட்டியலிலே கையெழுத்திட்டிருக்கின்ற திரு. கல்யாணசுந்தரம் அவர்களும், மற்றவர்களும் அந்தப் பட்டியலின் சாராம்சங்கள் அனைத்தையும் பத்திரிகைகளுக்குத் தந்திருக்கிறார்கள். அதைப் பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள்கூட ஏ.ஐ.ஆர். இல் கூடக் குறிப்பிட்டதாகவும், அகில இந்திய வானொலியில் அமைச்சரவை மீது சாட்டப்பட்ட லஞ்ச ஊழல் குற்றச் சாட்டுகளை

திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் பத்திரிகைகளுக்கு அளித்திருக்கிறார் என்று சொல்லப்பட்டதாகவும் தெரிவித்தார். ஆனால் விவரங்கள் முழு அளவில் வெளி வராவிட்டாலும் விஷயங்கள் வந்துவிட்டன.

நாட்டு மக்களின் எவ்வளவோ பிரச்சினைகளை இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல; நாட்டில் நடைபெற வேண்டிய பல் வேறு நல்ல காரியங்கள், மக்களுடைய அன்றாட வாழ்வுப் பிரச்சினை, தமிழ் நாட்டில் அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப் பட்ட மக்களுக்கு அளிக்க வேண்டிய நிவாரணப் பணிகள், இதற்கிடையில் ஏதோ லஞ்சம், ஊழல் என்று கூறி மக்கள் உள்ளத்தைத் திசை திருப்புகின்ற முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்கள் சாட்டிய குற்றச்சாட்டு களுக்குப் பதில் சொல்ல முடியாமல் அரசு திகைத்துக் கொண்டிருப்பதைப் போலப் பேசுவதை நாங்கள் அறியாமல் இல்லை. ஆகவே, அதற்கான பதிலைத்தர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நாங்கள் எந்த மரியாதையைப் பிரதமரிடத்தில் வைத்து, எந்த மரபைக் காப்பாற்ற வேண்டுமென்று எண்ணினோமோ, எவ்வளவு நாகரிகமாக நடந்து கொள்ள வேண்டுமென்று கருதினோமோ அதற்கு மாறாக, அந்தப் புகார்ப் பட்டியலை அங்கே கொண்டுபோய்க் கொடுத்த திரு. கல்யாணசுந்தரம் அவர்களும், புகார்ப் பட்டியலில் கையெழுத்திட்ட, இந்த மன்றத்தில் உறுப்பினராக இருக்கும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. தங்க மணி ஆகியோரும் இவைகளை எல்லாம் பத்திரிகைகளுக்குத் தந்திருக்கிறார்கள். திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும் அந்தப் பட்டியலில் உள்ளவைகளை வெளியில் சிலவற்றைப் பேசுவதும் இன்னும் நிறைய இருக்கிறது என்று குறிப்பிட்டுக் கொண்டிருப்பதும் இந்த அவையில் இருப்பவர்கள் அறியாததல்ல.

நேற்று கூடப் பார்த்தேன். மகஜரில் கையெழுத்திட்டிருக்கிற தலைவர்களில் ஒருவரான திரு. கே. டி. கே. தங்கமணி அரசாங்கத்தின் சார்பில் இந்தப் பட்டியலை தமிழக அரசாங்கமே வைக்க வேண்டுமென்று தமிழ்நாட்டு அரசாங்கத்தைப் பத்திரிகைகளில் அறிக்கை வாயிலாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார். ஆகவே புகாரைக் கொடுத்தவர்களே, அந்தப் புகாரைப் பெற்றுக்கொண்டவர்கள் எற்ற நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை இல்லாமல், அதற்கு மாறாக யாரிடம் மதிப்பு மரியாதை வைத்துக் கொடுத்தார்களே, அவர்களிடம் நம்பிக்கை இல்லாமல், அவர்களே இன்று அதை வெளியிட வேண்டுமென்று கூறி, அரசாங்கமே இதை வைக்க வேண்டு மென்று வலியுறுத்தி இருக்கிறார்கள்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 டிசம்பர் 14

நான் டாக்டர் ஹாண்டே அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் அன்றைக்கே இந்தப் பிரச்சனையை எழுப்பி இதை அரசின் சார்பில் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அவர்களுக்கும், அரசின் சார்பில் வைக்க வேண்டுமென்று இந்த அவைக்கு வராமல் அறிக்கை விட்டிருக்கிற கே. டி. கே. தங்கமணி அவர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் அறிவித்துக் கொள்கிறேன். இன்று அல்லது நாளை அந்தப் பட்டியலும், அதற்கு அரசு தருகிற பதிலும் இணைத்து, இங்கே அவையில் வைக்கப்படும் என்று கூறி, அவர்களுடைய குற்றப் பட்டியல் தனியாக வைக்கப்படும், அந்தக் குற்றசாட்டுகளுக்கான குறிப்பும், அதற்கான அரசாங்கத்தின் பதிலும் இந்த மன்றத்தில், இன்றைக்கு, தவறினால் நாளைக் காலையில், வைக்கப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(இ) பேரவை உறுப்பினர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மீது பாராளுமன்றத்தில் சுமத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து.**

* **திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அவையிலே இருக்கிறவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தாங்கள் தான் பொறுப்பேற்றிருக்கிறீர்கள். நம்முடைய பேரவையிலே உறுப்பினராக இருக்கக்கூடிய திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு 'டைரக்டரேட் ஆஃப் என்போர்ஸ்மென்ட்' டிலிருந்து 'ஷோ காஸ் நோட்டீஸ்' கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே 30 குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. நேற்றையதினம் திரு. எம். ஜி. ஆர். மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பற்றி பாராளுமன்றத்திலே கேள்விகள் கேட்டு, விவாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் குற்றச்சாட்டுகள் அடங்கிய பட்டியல் காப்பி ஒன்று என்னிடத்தில் இருக்கிறது. தாங்கள் அனுமதித்தால் அதை இந்த அவையிலே வைக்கவும் தயாராக இருக்கிறேன்.

இந்த மன்றத்தின் உறுப்பினர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ஜப்பான் நாட்டுக்குச் சென்றபோது ஒரு லட்சம் ரூபாய்க்கு 'பாரின் எக்சேஞ்ச்' அனுமதிக்கப்பட்டது. ஆனால் அங்கே அவர், இந்தியாவிலே இருக்கக்கூடிய பல கம்பெனிகளின் பெயரால் சுமார் 10 லட்சம் ரூபாய்க்கு ரிசர்வ் பாங்கின் அனுமதி இல்லாமலேயே பெற்றிருக்கிறார் எனத் தெரியவருகிறது. வெளிநாட்டு பாங்கில் ரிசர்வ் பாங்கின் அனுமதி இல்லாமல் கணக்கு வைத்திருக்கிறார். இன்னும் இப்படிப்பட்ட 30 குற்றச்சாட்கள் அவர்மீது சுமத்தப்பட்டிருக்கின்றன. நான் எம். ஜி. ஆரைக் குறை சொல்லவேண்டும் என்பதற்காக